வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 02.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நாளை தொடங்குகிறது.

வட இந்தியாவில் தை மாதத்தில் வரும் வளர்பிறை 5-ஆம் நாளான இன்று வசந்த பஞ்சமி தினமாக கொண்டாடப்படுகிறது.

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது.

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் மரபு காய்கறி, கிழங்கு மற்றும் விதை திருவிழா முதல் முறையாக இன்று நடைபெற்றது.

முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நாளை தொடங்குகிறது. இத்தீர்மானத்திற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வரும் 13-ஆம் தேதி பதில் அளிக்கிறார். பிரதமரின் பதில் உரையுடன் முதல் கட்ட பட்ஜெட் கூட்டத் தொடர் நிறைவு பெறும். இரண்டாம் கட்ட கூட்டத் தொடர் மார்ச் 10-ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் 4-ஆம் தேதி வரை நடைபெறும். இந்நிலையில் வஃப்பு வாரிய சட்ட திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கையை அதன் தலைவர் திரு ஜகதாம்பிகா பால் நாளை தாக்கல் செய்ய உள்ளதாக தெரிகிறது.

*வசந்த பஞ்சமி*

வட இந்தியாவில் தை மாதத்தில் வரும் வளர்பிறை 5-ஆம் நாளான இன்று வசந்த பஞ்சமி தினமாக கொண்டாடப்படுகிறது. இந்நாளில் கல்வியைத் தொடங்கும் குழந்தைகளுக்கு சிறப்பான எதிர்காலம் அமையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதனை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப் பதிவில் கல்வி, வளம், அறிவு, மகிழ்ச்சி, ஆகியவற்றுடன் இணைந்த இந்த விழாவை நாட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார். உலகின் அறிவுசார் மையமாக இந்தியா உருவெடுக்க வேண்டுமென்று தாம் இறைவனை பிராத்திப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். வசந்த பஞ்சமியை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி, வளம் ஆகியவற்றை இத்தினம் வழங்கட்டும் என்று பதிவிட்டுள்ளார்.

*பிரதமர்*

இந்தியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் இடையிலான உறவுகள் வெறும் புவிசார் அரசியல் மட்டுமல்ல ஆயிர கணக்கான ஆண்டுகள் பழமையானவை என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இந்தோனேசியாவின் ஜகார்தாவில் உள்ள சனாதன தர்ம ஆலயமான முருகன் கோவிலின் மகா கும்பாபிஷேகத்தின் போது காணொளி மூலம் உரையாற்றிய பிரதமர், இந்தியாவும்-இந்தோனேசியாவும் கலாச்சாரம், நாகரீக உறவுகள் மற்றும் ஆன்மிகத்தின் மூலம் இணைக்கப்பட்டுள்ளது என்றார். மேலும் பிரம்பனன் கோவில் போன்ற இந்தோனேசியாவில் உள்ள கோவில்களுக்கு இந்தியர்கள் செல்லும்போதெல்லாம் அவர்களுக்கு காசி மற்றும் கேதார்நாத் நினைவுக்கு வருவதாகவும் கூறினார். இந்தோனேசிய மக்களுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பிரதமர் இப்பதிவில் கூறி உள்ளார்.

ஐ □ா

கடந்த 10 ஆண்டுகளில் இந்தியா குறிப்பிடத் தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக ஐ நா பொது சபையின் தலைவர் திரு philemon yang தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர் டிஜிட்டல் மற்றும் தொழில் நுட்பம் அடிப்படையிலான செயல்பாடுகள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு காரணியாக திகழ்ந்தது குறித்து தமது இந்திய பயணத்தின் போது அறிந்து கொள்வதில் ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். அரசு முறைப் பயணமாக இம்மாதம் 4-ஆம் தேதி முதல் 8-ஆம் தேதி வரை அவர் இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

அம்ருத் தோட்டம்

குடியரசு தலைவர் மாளிகையில் உள்ள அம்ருத் தோட்டத்தை பொது மக்கள் இன்று முதல் பார்வையிட அனுமதிக்கப்படுகின்றனர். மார்ச் 30-ஆம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை திங்கட்கிழமை தவிர்த்து வாரத்தின் 6 நாட்களிலும் இத்தோட்டத்தை பார்வையிட இணையதளத்தில் முன்பதிவு செய்யுமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

நிர்மலா

மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவித்த புதிய வருமானவரி சட்டத்தை அடுத்த 6 மாதங்களுக்குள் நடைமுறைப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார். செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில் நேரடி வரியை எளிமையாக்கி அதனை இலகுவாக செயல்படுத்துவதே மத்திய அரசின் நோக்கம் என்றார். வருமானவரியை முறையாக செலுத்தி நாட்டின் சேவைக்கு பணியாற்ற பொது மக்கள் முன் வர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

*மன்சுக் மாண்டவியா*

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா இன்று புதுடெல்லியில் ஜவஹர்லால் நேரு மைதானத்தில் இந்திய கடற்படை அரை மராத்தானை கொடி அசைத்து தொடக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் எல்லா வயதினர் மற்றும் தொழில் துறையைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் தங்களின் உறுதிப்பாடு மற்றும் விளையாட்டு திறனை இதில் பங்கேற்று வெளிப்படுத்தினர். மேலும் பாதுகாப்பு படைத் தலைவர், கடற்படைத் தலைவர், விமானப்படைத் தலைவர், மூத்த சேவை அதிகாரிகள் மற்றும் பிற பிரமுகர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த மாரத்தான் அனைத்து பங்கேற்பாளர்களிடையே உடல் நலன் மற்றும் உடல் தகுதியை மேம்படுத்தவும், சுறுசுறுப்பான வாழ்க்கை முறையைப் பின்பற்ற ஊக்குவிப்பதையும் நோக்கமாக கொண்டுள்ளது.

முன்னதாக, புதுடெல்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, உடல் பருமன் குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்குமாறு வலியுறுத்தி உள்ளார். அவர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெவ்வேறு கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு உடல் நலம் சார்ந்த நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதாக கூறினார்.

டெல்லி தேர்தல்

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது. பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி உள்ளிட்ட அரசியல் கட்சியினர் உச்சகட்ட வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர். பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி இன்று ஆர்.கே. புரத்தில் பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். காங்கிரஸ் கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே முஸ்தபா பாத் தொகுதியில் பொதுக் கூட்டத்தில் வாக்கு சேகரிக்கிறார். புதுடெல்லியின் பல்வேறு

பகுதிகளின் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான திரு ராகுல்காந்தி, திருமதி பிரியங்கா காந்தி ஆகியோர் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர். ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜரிவால் டெல்லியில் பல்வேறு பகுதிகளில் இன்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். இம்மாதம் 8-ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

*ஆகாஷ்வாணி*

மத்திய கலாச்சார அமைச்சகம், ஆகாஷ்வாணியுடன் இணைந்து சிறப்பு பாரம்பரிய இசை ஒலிபரப்பு நிகழ்ச்சியை புதுடெல்லி ஆகாஷ்வாணியில் இன்று தொடங்கியது. வரும் 16-ஆம் தேதி வரை தினமும் காலை 9.30 மணி முதல் 10 மணி வரை 21 ஆகாஷ்வாணி மையங்களில் இருந்து இந்நிகழ்ச்சி நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படும். இளம் கலைஞர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த ஏதுவாக அதற்கான தளத்தை இந்நிகழ்ச்சி வழங்கும் என்று மத்திய கலாச்சார அமைச்சகத்தின் செயலர் திரு அருண் சாவ்லா தெரிவித்துள்ளார். இதன் மூலம் 600-க்கும் மேற்பட்ட கலைஞர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளதாக பிரச்சார் பாரதி தலைமை நிர்வாக அதிகாரி திரு கவுரவ் திவேதி தெரிவித்துள்ளார்.

*விதை திருவிழா*

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் மரபு காய்கறி, கிழங்கு மற்றும் விதை திருவிழா முதல் முறையாக இன்று நடைபெற்றது. புதுச்சேரி, திருச்சி, மதுரை, கோவை, கடலூர், விழுப்புரம், பண்ருட்டி போன்ற பகுதிகளில் இருந்து 200 விவசாயிகள் பங்கேற்று மரபு காய்கறி, கிழங்கு மற்றும் விதைகளை காட்சிக்கு வைத்ததுடன் பரிமாறிக் கொண்டனர். மேலும் மாடித் தோட்டம் அமைத்தல், விதைப் பந்து செயல் விளக்கம், நூற்றுக் கணக்கான நாட்டு காய்கறி விதைகள், இயற்கை இடு பொருட்கள் ஆகியவை கண்காட்சியில் இடம் பெற்றிருந்தன. இதனை

ஏராளமான வெளிநாட்டவர் கண்டு பயன் பெற்றதுடன் விதைகளையும் வாங்கிச் சென்றனர்.

*ஈர நில தினம்*

உலக ஈர நில தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது. தாவர மற்றும் பிற உயிரினங்களைக் கொண்ட நீர் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தை மேம்படுத்த ஈரானிய நகரமான ராம்சரில் 1971-ஆம் ஆண்டு நடைபெற்ற ராம்சர் மாநாட்டில் கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கையின் படி, ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 2-ஆம் தேதி இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது. நமது பொதுவான எதிர்காலத்திற்காக ஈர நிலங்களை பாதுகாத்தல் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு அனைத்து மக்களின் நலனுக்காக இயற்கை வாழ்விடங்களை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தி உள்ளது. இதனால் எதிர்கால சந்ததியினர் ஈர நிலங்கள் வழங்கும் அனைத்திலிருந்தும் தொடர்ந்து பயன் அடைய முடியும்.

*அமெரிக்கா-வரி*

சட்டவிரோத குடியேறிகள் மற்றும் போதைப் பொருள் விநியோகம் விவகாரத்தில் கனடா, மெக்சிகோ, சீனா மீது கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் அறிவித்திருந்தார். அதன்படி, மெக்சிகோ மற்றும் கனடாவில் இருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவிகிதமும், சீன பொருட்களுக்கு 10 சதவிகிதமும் வரி விதிப்பு உத்தரவில் டிரம்ப் நேற்று கையெழுத்திட்டார். இந்நிலையில் அமெரிக்காவிற்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்நாடு மீது கனடா கூடுதல் வரியை விதித்துள்ளது. இதுகுறித்து கனடா நாட்டின் பிரதமர் திரு ஜஸ்டின் ட்ரூடோ கூறுகையில் அமெரிக்க இறக்குமதியில் 155 பில்லியன் டாலர் மதிப்புள்ள பொருட்களுக்கு 25 சதவிகித வரிகளை விதிக்கும் என்று அறிவித்தார். அமெரிக்கா விதித்த வரிகள் சில ஆண்டுகளுக்கு முன்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு கையெழுத்திடப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்தை மீறுவதாகவும் இந்த வரி

விதிப்பு அமெரிக்க மக்களுக்கு கடும் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் திரு ஜஸ்டின் கூறி உள்ளார்.

கிரிக்கெட்

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 5-ஆவது, இறுதி 20-20 கிரிக்கெட் போட்டி இன்று மும்பையில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-க்கு 1 என்ற கணக்கில் தொடரை ஏற்கனவே கைப்பற்றி உள்ளது.

முன்னதாக கோலாலம்பூரில் 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஐசிசி மகளிர் உலக கோப்பை 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இந்திய அணி தென்னாப்பிரிக்க அணியை வென்றது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவரின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நாடாளுமன்ற இரு அவைகளிலும் நாளை தொடங்குகிறது.

வட இந்தியாவில் தை மாதத்தில் வரும் வளர்பிறை 5-ஆம் நாளான இன்று வசந்த பஞ்சமி தினமாக கொண்டாடப்படுகிறது.

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளுக்கான தேர்தல் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில் இதற்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைகிறது.

புதுச்சேரியை அடுத்த ஆரோவில்லில் மரபு காய்கறி, கிழங்கு மற்றும் விதை திருவிழா முதல் முறையாக இன்று நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

--------------------